
## திராவிடத்தால் வாழ்கிறோம்

1261

எழுத்து: கோவி.லெனின்
ஓவியம்: கி.சொக்கலிங்கம்




- வாழ்வோம்

## பொய்ப்பெட்டி

கோவி.லெனின்

119

"கழகம் சந்திக்கும் அவதூறுகள் குறித்த வினாவும் - விடையும்..."

# ஆளுநரிடம் புகார்... பதறும் பச்சோந்திகள்!



**ஆளுநர் பதவியே தேவையில்லை என்று சொல்லி, ஆளுநருக்கு எதிராகப் போராட்டங்கள் நடத்திய தி.மு.க., அதே ஆளுநரிடம் ஏன் த.வெ.க. அரசின் 'குதிரை பேரம்' குறித்து, புகார் அளிக்க வேண்டும் என்று சிலர் விமர்சிக்கிறார்களே?**

த.வெ.க.வின் தலைமை முதல் கடைக்கோடி வரை யாருக்கும் இந்திய அரசமைப்புச் சட்டங்கள் பற்றி எதுவும் தெரியாது. சொன்னாலும் புரியாது என்பதால் அவர்களை விட்டுவிட்டு, பொதுமக்களின் தெளிவுக்காக விளக்கமான பதில் சொல்லலாம். தி.மு.க.வைப் பொறுத்தவரை அன்றும்-இன்றும் ஆளுநர் பதவி என்பது தேவையற்றது, அது நீக்கப்பட வேண்டும் என்ற கொள்கையில் உறுதியாக இருக்கிறது. ஆனால், ஆளுநரை நீக்கும் அதிகாரம் தி.மு.க.விடம் கிடையாது. அது நாடாளுமன்றத்தில் பெரும்பான்மை பலத்துடனான அரசியல் சட்டத் திருத்தத்தின் மூலம் நிறைவேற்றப்பட வேண்டியதாகும். நாடாளுமன்றத்தில் இப்போது அதிகாரம் செலுத்துவது பா.ஜ.க.தான்.

தற்போதைய அரசமைப்புச் சட்டத்தின்படி, ஆளுநர் தான் ஒரு மாநிலத்தின் நிர்வாகத் தலைமைப் பொறுப்பில் இருக்கிறார். அவரது அதிகாரம் தொடர்பான விதிகளின்படி, மாநில அரசு தொடர்பான அறிக்கையை ஆளுநர் தான் ஒன்றிய அரசுக்கு அனுப்பி வைப்பார். முதலமைச்சர் மற்றும் அமைச்சர்கள் உள்ளிட்ட மாநில அரசு தொடர்பான சட்ட நடவடிக்கைகளுக்கு அனுமதி அளிக்க வேண்டிய அதிகாரமும் தற்போதைய அரசமைப்புச் சட்டத்தின்படி ஆளுநரிடம் தான் உள்ளது. அதனால்தான், த.வெ.க.வின் 'குதிரை பேரம்' பற்றி ஆளுநரிடம் தி.மு.க. மனு அளித்திருக்கிறது. ஆளுநர், தனக்குரிய சட்டப்படியான அதிகாரத்தைப் பயன்படுத்தா விட்டால், த.வெ.க. அரசின் குதிரை பேர விவகாரத்தை, உச்ச நீதிமன்றத்திற்குக் கொண்டு செல்வோம் என்று ஆளுநரிடம் புகார் அளித்த தி.மு.க. அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி தெளிவாகத் தெரிவித்திருக்கிறார்.

தி.மு.க. தொடர்ந்து வலியுறுத்திவரும் மாநில சுயாட்சிக் கொள்கையின் அடிப்படையில், நியமனப் பதவியான ஆளுநர் பதவியை நீக்கிவிட்டு, மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட மாநில அரசுக்கே அதிகாரங்கள் வரும்போது, மாநில ஆட்சியாளர்கள் மீதான புகார்களுக்கு ஆளுநரின் தயவு தேவையின்றி, நேரடியாகவே நீதிமன்றங்களை நாடுகின்ற சூழல் அமையும். தற்போது, ஆளுநரின் கைகளில் அந்த அதிகாரத்தை இந்திய அரசமைப்புச் சட்டம் வழங்கியிருக்கிறது. சட்டப்படியாக உள்ள அதிகாரத்தின்படி தி.மு.க. செயல்படுகிறது.

அதே நேரத்தில், ஆளுநருக்கு வரையறுக்கப்பட்டுள்ள அதிகாரத்தை மீறி அவர் செயல்பட்டால், தி.மு.க. ஆளுங்கட்சியாக இருந்தாலும், எதிர்க்கட்சியாக இருந்தாலும் எதிர்த்து நிற்கத் தயங்கியதேயில்லை. அ.தி.மு.க. ஆட்சியில் பன்வாரிலால் புரோகித் ஆளுநராக இருந்தபோது, அவர் ஆய்வுப் பணிகளை நேரடியாக மேற்கொண்டதை எதிர்த்து, அவர் சென்ற இடங்களில் எல்லாம் போராட்டம் நடத்தி, ஆளுநரின் ஆய்வை முடிவுக்குக் கொண்டுவந்தது தி.மு.க.தான்.

அதுபோலவே, ஆட்சியில் இருந்தபோது சட்டமன்றத்தில் ஆளுநர் உரையின்போது, 'தமிழ்த்தாய் வாழ்த்து'தான் முதலில் பாடப்படும் என்பதில் உறுதியாக நின்று, ஆளுநரே வெளிநடப்பு செய்யும் நிலையை உருவாக்கிய வரலாறும் தி.மு.க.வுக்கே உரியது.

சட்டமன்றத்தில் மட்டுமின்றி, நீதிமன்றத்திலும் ஆளுநரின் அதிகார அத்துமீறல்களுக்கு எதிராக வழக்குத் தொடுத்து, மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட மாநில அரசின் அதிகார வலிமையையும் தி.மு.க. உறுதிசெய்துள்ளது. குதிரை பேர த.வெ.க. அரசோ, ஆளுநரையோ ஒன்றிய அரசையோ எதிர்த்து வாய் திறக்கவே பயந்து நடுங்குகிறது.

...வினா தொடரும்.

## பயமில்லாமல் ஒரு மோசடி!

பழனி தண்டாயுதபாணி கோயிலுக்குச் சொந்தமான நிலத்தை மோசடியாகப் பத்திரப்பதிவு செய்த விவகாரத்தில், நீதிமன்றம் பல கேள்விகளை எழுப்பியதுடன், அந்த பத்திரப் பதிவையும் ரத்துசெய்துள்ளது. இது தொடர்பாக, சமூக வலைதளங்களில் வெளியான கருத்துகளில், யோகநாதன் நடராஜன் என்பவரின் பதிவிலிருந்து...

"அந்த இடத்தை வாங்கிய நபர்கள் யார்? என்ன, என்று தோண்டித் துருவும் ஊடகங்கள், சங்கிகள் வாய் மூடி அமைதியாக இருக்கிறார்கள். இந்த இடத்தை மாற்றிய நபர்கள் - விழுப்புரம் முருகதாஸ், வெள்ளத்துரை பாப்பான்குளம், உடுமலை பழனி, டி.கே.என். புதூரைச் சேர்ந்த சேதுபதி. இவர்களின் பெயரோ, ஃபோட்டோவோ எங்கேயும் வெளி வரல. வந்தால், பின்னால் உள்ள அதிகார மையங்கள் வெளிச்சத்துக்கு வந்துவிடுவார்கள் என்ற பயமா? எனத் தெரியவில்லை" என்று குறிப்பிட்டுள்ளதுடன், சில கேள்விகளையும் எழுப்பியுள்ளார்.

1. இருக்கும் சார்பதிவாளரை மாற்றிவிட்டு, ஒரே ஒரு நாள் இதெற்கென பக்கத்தில் உள்ள சார்பதிவாளரை இங்கே வரவழைத்தது யார்?

2. அந்தக் கோயில் கமிஷனருக்கு புரொமோஷனில் கையெழுத்துப் போட்டு இடமாற்றம் செய்தது யார்?

3. ஃபோட்டோவை விடுங்கள், ஏன் குற்றவாளிகளின் பெயர்கள்கூட இருட்டடிப்பு செய்யப்படுகின்றது?

4. இதையெல்லாம் சரியாக விளக்கம் கொடுக்காமல் கடக்கும் அமைச்சர், 'அவர்கள் தன் உறவினர் இல்லை' என்றும், 'அப்படிச் சொல்பவர்கள் மேல் சட்ட நடவடிக்கை, கைது பாயும்' என்றும் ஏன் மிரட்டுகிறார்? அவர்கள் பெயர், படத்தை வெளியிட வேண்டியதுதானே..? எனக் கேட்டுள்ளார்.

5. முறுக்கு விவகாரத்தில் முறுக்காக நடந்துகொண்ட அமைச்சர், 'குன்னூரில் கோயிலுக்குச் சொந்தமான இடத்தில் கார் பார்க்கிங் ஏன்?' என ஒப்பந்தத்தை ரத்துசெய்த அமைச்சர், பழனி நில மோசடியில் ஏன் பம்முகிறார்.

6. தி.மு.க. ஆட்சியில் மூன்று முறை தேதிவாரியாகப் பத்திரப்பதிவு தடுக்கப்பட்டது என வெட்கமே இல்லாமல், தன் சாதனை போல பீற்றிக்கொள்ளும் அமைச்சர், தங்களது த.வெ.க. தூய ஆட்சியில், இது எப்படி நடந்தது என்று விளக்கமாகச் சொல்வாரா?

இதே விஷயம் தி.மு.க. ஆட்சியில் என்றால், வானத்துக்கும் பூமிக்கும் குதிப்பவர்கள், இதில் ஏன் அடக்கி வாசிக்கிறார்கள்?" என்கிற கேள்விகளை முன்வைத்துள்ளார்.

## ஃப்ளாஷ்பேக்



ரா.டீடா சரவணன்



### தலைவரைக் கண்டேன், மகிழ்ந்தேன்!

2012-ஆம் ஆண்டில், இன்றைய இளைஞர் அணிச் செயலாளர், இளந்தலைவரின் ரசிகர் நற்பணி மன்றத்தின் ஒருங்கிணைந்த வேலூர் மாவட்டத் தலைவராக இருந்தபோது, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களைச் சந்தித்தேன். 'தலைவரைக் கண்டு புகைப்படம் எடுத்துக்கொள்ள வேண்டும்' என்கிற என் நெடுநாள் விருப்பம் நிறைவேறியதில், நான் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவே இல்லை.

**- ரா.டீடா சரவணன், வேலூர் மாமன்ற உறுப்பினர், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர், வேலூர் வடக்கு.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 82204-51520
மின்னஞ்சல்: murasolipaasarai@gmail.com




## கருவூலம்

### அரிசிக்குப் பதில் கோதுமை!

1957-ஆம் ஆண்டுவாக்கில், உணவுப் பற்றாக்குறை ஏற்பட்டபோது, ஒன்றிய அரசு கோதுமையை மட்டுமே அதிக அளவில் இறக்குமதி செய்தது. இது தொடர்பாக, ஒன்றிய அமைச்சர் அஜித் பிரசாத் ஜெயினிடம் பத்திரிகை யாளர்கள் கேள்வி எழுப்பியபோது, "அரிசி இறக்குமதி கிடையாது, அரிசிக்குப் பதில் தென்னக மக்களும் கோதுமை உண்ணட்டும்" என்று கூறினார். 'அரிசிக்குப் பதில் கோதுமை என்பதை உடனடியாகக் கைவிட வேண்டும்' எனக் கழகத்தின் சார்பில் கண்டனக் குரல் எழுப்பப்பட்டது. 1957-ஆம் ஆண்டு டிசம்பர் 11, 'திராவிட நாடு' இதழ், தலையங்கம் எழுதிக் கண்டித்துள்ளது.

RNI 1244/57 - Postal Reg.No.MA/43/2024-2026.Licenced to post under without pre payment of postage vide No.TN/WPP-94/SR/2024-2026 Published by Karthikeyan Shanmugasundaram on behalf of Murasoli Trust from No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 and Printed by D.Karthikeyan at Dinakaran Press, No.2/2, Melur Main Road, Uthangudi, Madurai - 625 107. Editor: Karthikeyan Shanmugasundaram, Regn.No.7436, Ph:044 - 45849900